# சுதந்திர இலங்கையில் அடிப்படை உரிமை இழந்த மலையக மக்கள்

புளோரிடா சிமியோன்

அரசறிவியல் துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.இலங்கை.
*floridasimeon18@gmail.com*

**ஆய்வு சுருக்கம் -** கி.பி.1820-1840 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்தியாவின் தென்மானிலத்திலிருந்து இலங்கை பெருந்தோட்ட பயிர்செய்கைக்காக ஆங்கிலேயரால் அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி மக்களே இன்றைய மலையகத் தமிழர். இச்சமூகமே இன்று தேசிய ரீதியில் Indiyan Tamils, Plantation Tamils, Estate Tamils, Upcountry Tamils or Hill country Tamils என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இன்று நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.3% ஆக பதுளை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தளை, மொனராகலை, குருணாகல், கொழும்பு மற்றும் வட கிழக்கில் கலவர காலத்தில் குடியேறியும் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய வரலாற்றைக் கொண்ட மலையக சமூகம் 200 வருட காலத்தை கடந்தவிட்ட நிலையிலும் இலங்கையில் தேசிய ரீதியான அபிவிருத்தி அடைவுமட்ட பொதுச்சேவைகளை பெற்றுக் கொள்வதில் பாரபட்சமாக நடாத்தப்படுகின்றனர் என்பதை கருதுகோளாகக் கொண்டுள்ளது. இது ஓர் சமூக விஞ்ஞான ஆய்வாக இருப்பதால் இவ்வாய்விற்காக குழுக்கலந்துரையாடல்கள், நேர்காணல் என்பன முதலாம் நிலை தரவுகளாகவும், நூல்கள், இணையத்தளம் என்பன இரண்டாம் நிலை தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டு மலையக சமூகம் ஒரு தேசிய இனத்துக்குரிய அடையாளத்தினை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் ஏன் இதுவரையில் ஆட்சிப்பீடம் ஏறிய எந்தவொரு அரசாங்கமும் ஒரு நிலைபேறான அபிவிருத்தியை மேற்கொள்ளவில்லை? என்பதை ஆய்வு பிரச்சினையாக முன்வைத்து இலங்கையின் பொருளாதாரத்தினை பலப்படுத்தும் பெருந்தோட்ட சமூகத்தின் வளர்ச்சி நிலையில உள்ள தடைக்கல்லை நீக்கி இம்மக்களும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவை இவ் ஆய்வு வழங்குகிறது.

**திறவுச்சொற்கள் -** (மனித உரிமை, மலையக மக்கள், சட்டங்கள், அபிவிருத்தி, பொதுச்சேவை.)

## I. ஆய்வு அறிமுகம்

கி.பி.1820-1840 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்தியாவின் தென்மானிலத்திலிருந்து இலங்கை பெருந்தோட்ட பயிர்செய்கைக்காக ஆங்கிலேயரால் அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி மக்களே இன்றைய மலையகத் தமிழ் மக்கள். 1815ம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தியினுடைய விளைவால் தென்னிந்தியாவில் இருந்து 1803ம் ஆண்டு சாலை அமைக்கும் பணிக்கென பிரட்ரிக் நோர்த்தினால் தமிழ் நாட்டிலிருந்துஒப்பந்த கூலிகளாக அழைத்து வரப்பட்டனர்[1]. இவர்கள் இந்தியாவின் இராமேஸ்வரம், தலைமன்னார், தம்புள்ளை, மாத்தளை வழியாக நடைப்பயணத்தினூடாக கண்டியை அடைந்து 1823ம் ஆண்டு கவர்னர் எட்வட் பான்ஸ் ஆரம்பித்த கன்னொருவ கோப்பித்தோட்டத்திலே மலையக தமிழரின் சரித்திரம் உதயமாகியது[9].1867ம் ஆண்டு (1869 கோப்பிக்கு ஏற்பட்ட வெளிறல் நோயின் பின்) லூல்கந்துற தோட்டம் ஹேவாஹெட்ட பகுதியில் தேயிலையும், களுத்துறை பகுதியில் இறப்பரும் தெங்கும் பயிரிடப்பட்டன. இவற்றை பராமரித்து உற்பத்தி பொருளை பெற இந்திய வம்சாவளி தொழிலாளர்களின் தேவைப்பாடு அவசியமாக உணரப்பட்ட போது அம்மக்கள் இங்கு நிரந்தரமாகவே லயன் வாழ்க்கைக்குள் சிறைப்பிடிக்கப்பட்டனர்ஜ8ஸஜ9ஸ. இச்சமூகமே இன்று தேசிய ரீதியில் Indiyan Tamils, Plantation Tamils, Estate Tamils, Upcountry Tamils orHill country Tamils என அழைக்கப்படுகின்றனர்.இவர்கள் இன்று நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.3%ஆக பதுளை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தளை, மொனராகலை, குருணாகல், கொழும்பு மற்றும் வட கிழக்கில் கலவர காலத்தில் குடியேறியும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெருந்தோட்டங்களில் வசிப்போர் 88.4% மலையத் தமிழராகவும், 10.7% சிங்களவர்களாவும், 0.9% ஏனைய இனத்தவர்களாகவும் காணப்படுகின்றனர். 15 லட்சம் மலையக தமிழர்களில் 2/3 பகுதியினர் பெருந்தோட்டங்களிலேயே வசிக்கின்றவர்களாகவும்,1/3 பங்கினர் தோட்டத்தொழிலில் இருந்து விடுபட்டும் காணப்படுகின்றனர். இத்தகைய வரலாற்றைக் கொண்ட மலையக சமூகம் 200 வருட காலத்தை கடந்தவிட்ட நிலையிலும் இலங்கையில் தேசிய ரீதியான அபிவிருத்தி அடைவுமட்ட பொதுச்சேவைகளை பெற்றுக் கொள்வதில் பாரபட்சமாக நடாத்தப்படுகின்றனர். இது மனிதஉரிமை அடிப்படையில் மிகபாரதூரமான ஒன்றாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

## II. ஆய்வின் கருதுகோள்

மலையக மக்கள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் தேசிய அபிவிருத்தி கொள்கை திட்டங்கள்,பொதுச்சேவைகளில்பாராபட்சத்தினை எதிர்நோக்குகின்றனர்.

## III. ஆய்வு பிரச்சனை

1. மலையக சமூகம் ஒரு தேசிய இனத்துக்குரிய அடையாளத்தினை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் ஏன் இதுவரையில் ஆட்சிப்பீடம் ஏறிய எந்தவொரு அரசாங்கமும் ஒரு நிலைபேறான அபிவிருத்தியை மேற்கொள்ளவில்லை?

2. 2. இலங்கையில்லுள்ள ஏனைய தேசிய இனங்கள் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகள், சலுகைகள் அபிவிருத்திகள் போன்றவற்றில் மலையக சமூகம் பின்தள்ளப்படுவதற்கான காரணம் என்ன?

### IV. ஆய்வு முறையியல்

இது ஓர் சமூக விஞ்ஞான ஆய்வாக இருப்பதால் இவ்வாய்விற்காக குழுக்கலந்துரையாடல்கள் நேர்காணல் என்பன முதலாம் நிலை தரவுகளாகவும், நூல்கள், இணையத்தளம் என்பன இரண்டாம் நிலை தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### V. ஆய்வு பற்றிய கலந்துரையாடல்

மலையகத் தமிழரை பாதிக்கும் வகையில் வரலாற்றில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் மற்றும் சட்டங்கள்.

1. 1948ம் ஆண்டு 18வது இலக்க பிரஜா உரிமை சட்டம்
2. 1949ம் ஆண்டு 20ம் இலக்க குடிவரவு, குடியகழ்வு சட்டம்
3. 1949ம் ஆண்டு Indian and Pakistan residents citizen ship act no 3 of 1949
4. 1949ம் ஆண்டு parlimenting elections amendment act no 48 of 1949
5. 18 January 1954 Indian prime minister Jawaharlal Nehru and Ceylon prime minister John kotelawala signed the Nehru kotelawala pact
6. 30 October 1946 Indian prime minister lal shastri and Ceylon prime minister sirimavo bandaranaike signed the srima shastri pact (indo – Ceylon agreement)
7. On 28 june 1974 indian prime minister Indian Gandhi and Ceylon prime minister sirimavo bandaranaka signed the sirimavo – Gandhi pact
8. 1982 sirima – sharthi pact and sirimavo Gandhi pact அமுலாக்கல் சட்டம்
9. 1988 குடியுரிமைச்சட்டம்
10. On 7 October 2003 பிரஜா உரிமைச்சட்டம்

இவ்வாறான உடவடிக்கைகள் மலையக தமிழ் சமூகத்தின் அடிப்படை உரிமையை மீறுவதாக அமைந்ததோடு இம்மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டு ஏனைய இனங்களில் இருந்து இரண்டாம்தர சமூகமாக அடையாளப்படுத்தப்பட்டனர்.இம்மக்கள் மீதான கட்டமைக்கபட்ட வன்முறைகள், நேரடியான இன வன்முறைகள் 1958, 1970, 1977,1981,1983 ஆண்டுகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு இவர்களது சனத்திரள் சிதறடிக்கப்பட்டு வரலாறுகள்சிதைக்கப்பட்டன[4]. ஆயினும் இன்றைக்கு நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.3% மாக இம்மக்கள் வாழ்கின்றனர்[3].இவ்வாறான ஒரு சூழ்நிலையில் பெருந்தோட்ட சமூகம் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினைகள் பலவாக அமைகின்றன.

### 1. பாராபட்சமான சட்டங்கள்

பிரதேச சபையின் சில சட்டங்கள் பெருந்தோட்ட சமூகக் கட்டமைப்புக்குள் இதன் சேவை வழங்களை கட்டுப்படுத்துவதாக காணப்படுகின்றது. குறிப்பாக பிரதேச சபைகள் சரத்து 33, 19(xiv), 19(xxii), 134(4) ஆகியன பிரதேச சபைகள் கிராமிய பிரதேசத்துக்குள்ளேயே செயற்பட முடியும்,தோட்டங்கள் தனி சொத்துடமை என்றும் பிரதேச சபையின் நிதி கிராமிய அபிவிருத்திக்காவே செலவிட முடியும் எனவும்பெருந்தோட்டங்கள், தோட்ட உற்பத்திக்கான செயற்பாட்டுக்கு ஆக்கப்பட்ட பிரதேசங்கள் எனவும் இப்பிரதேச சபை சட்டங்கள் குறிப்பிடுகின்றன. 1987ம் ஆண்டு 17ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 33க்கு இனங்க செல்வகந்த மற்றும் நியூபீகொக் தோட்டங்களில் (பிரதேசபையின் விதிகளை கொண்டு) மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டமானது பிரதேச சபைக்கு உட்படாத பெருந்தோட்ட சொத்துக்களுக்கு இப்பிரதேச சபையின் நிதியை பயன்படுத்த உடபலாத்த பிரதேச சபை அனுமதி வழங்கியமை சபையின் சட்டத்தினை மீறியுள்ளது என 2008ம் ஆண்டு பிரதேச சபை கலைக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.1992ல் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டுவரப்பட்ட சிறுபான்மையினர் தொடர்பான பிரகடனமஇ சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடுகள் மற்றும் உரிமைகள் மீறப்படுவதை தடுத்து அவர்களது உரிமையினை ஊக்குவிப்பதையே நோக்காகக் கொண்டிருந்தது. 1948ம் ஆண்டு வெளியிடப்பட்ட அனைத்துலக மனித உரிமை பிரகடனத்தின் 22ம் உறுப்புரையானது ஒவ்வொரு பிரஜையும் சமூக பாதுகாப்புக்கான வளங்களைப் பெற்று தமது மதிப்பு மற்றும் ஆளுமையை விருத்தி செய்வதற்கும், சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளை பெறுவதற்கும் உரித்துடையவர்கள் எனக் குறிப்பிடுகின்றது[5]. இதனை மேற்கொண்டு பார்க்கும் பொழுது பெருந்தோட்ட சமூகத்தின் செயற்பாடுகளில் இலங்கை அரசு இவ்வுரிமைகளை முழுமையாக மீறியுள்ளது.

**2. பொது நிர்வாகக் கட்டமைப்புக்குள் சிக்கல் தன்மை**

நாட்டில் சராசரியாக 30,000 தொடக்கம் 40,000 பேருக்கு ஒரு பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நுவரெலிய மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவு 2,20,432 பேரை சனத்தொகையாகவும், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு 2,06,944 சனத்தொகையும் கொண்டுள்ளது. இம்மாவட்டத்திலே பெருந்தோட்ட மக்கள் அதிகம் வசிப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் அம்பாறையில் பத்தாயிரத்துக்கும் குறைவான மற்றும் 20,000ற்கும் குறைவான சனத்தொகையினை கொண்டு 17 பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஹம்பாந்தோட்டையில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 3,83,361 ஆனால் அங்கு 10 பிரதேச சபைகள் உள்ளன. ஆனால் 4,36,236 பேரை மொத்த வாக்காளராகக் கொண்ட நுவரெலியா மாவட்டத்தில் 5 பிரதேச சபைகளே உள்ளன. 1996ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட (UNO 1966) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனையில் (1996 – ICCPR) நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுத்துறை விவகாரங்களில் பங்கேற்றுதமது நாட்டின் அரசாங்க சேவையில் ஒவ்வொருவரும் சேர்ந்து சமத்துவமாக பங்காற்ற முடியும் என்கின்றதுஜ3ஸ. ஆனால் இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பை ஆராய்கின்றபோது பெருந்தோட்ட சமூகம் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

**3. நிதி ஒதுக்கீட்டில் பாராபட்சம்**

உள்ளூர்மட்ட அரசாங்க செயன்முறையில் 8,900 பேரைக் கொண்ட லகுகல பிரதேச சபைக்கு வழங்கப்படுகின்ற வளம், நிதி ஒதுக்கீடே 1,50,000 பேர் வசிக்கும் அம்பகமுவ, நுவரெலிய பிரதேச சபைகளுக்கும் வழங்கப்படுகின்றது. தேசிய ரீதியில் செயற்படும் கல்வி ,சிறுவர் விவகார,சுகாதாரம் போன்ற அமைச்சிக்களினுடைய நிதி ஒதுக்கீடுகள் பெருந்தோட்டப் பகுதியை நோக்கிய அபிவிருத்தி திட்டங்களுக்கு சிறிய அளவிலேயே செலவிடப்படுகின்றது. இது தேசிய ரீதியில் ஏனைய பிராந்தியங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியிலும் பார்க்க குறுகிய அளவாகும்.

**4. வீட்டுத்திட்ட அபிவிருத்தி**

1986ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டுவரப்பட்ட ருழே 1986 அபிவிருத்திக்கான உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனமானது அபிவிருத்தி ஒவ்வொரு பிரஜையின் உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் இனமத, பிறப்பு. பிரதேசம், வம்சாவழி ரீதியான எந்தபாகுபாடும்காட்டப்பட கூடாது என்கின்றது. ஆயினும் 1930ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்திய தொழிலாளர் சட்டமானது பெருந்தோட்டங்களின் வேதனம், வீடு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றையும் தோட்டத்தொழிலாளர்களின் சேமநலன்களை மேற்கொள்ளும் உரிமையினையும் தோட்ட முகாமையாளரிடமும் தனியார் கம்பனிகளிடமும் வழங்கியது. இச்செயற்பாடு இவர்களை ஒரு தனியான நிர்வாக முறைக்குள் கொண்டு சென்றதுடன் அபிவிருத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தியது[6]. பெருந்தோட்டங்களில் 75 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட 6 அடி அகலத்தையும் 10 அடி நீளத்தையும் கொண்ட லயன் அறைகளிலே80ூ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 1984ம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்ட 10 இலட்சம் வீடமைப்பு திட்டத்தின் கீழ் இம்மக்களுக்கான துணைத்திட்டம் ஆரம்பிக்க முன்வந்த போதும் அது முழுமை பெறவில்லை எனினும் 1988 – 1990ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கான இரட்டை வீட்டுத்திட்டம் வெளிநாட்டு நிதிதிட்டத்துடன் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் சமூக நலநிதி அறிக்கை 8,20,000 பேர் 191,000 லயன்களில் வாழ்ந்து வருவதாக கூறுகின்றது. இதில் 25% லயன்கள் திருப்தியானதாகவும் 5ூம் எவ்வித திருத்த வேலைகளையும் செய்ய முடியாதவையாகவும் 70%மான லயன்கள்போதிய அடிப்படை வசதி அற்றவை(FCE 2005) எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது[2]. இதில் 36,000 தனி வீடுகளை தாபித்துள்ளது. இது தனிவீட்டு திட்டமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது ஆனால் இதற்கான காணி உறுதியினை வழங்குவதில் சட்டச்சிக்கல் நிலை உள்ளதும் குறிப்பிடத்தக்கதே. மலையக மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக பசுமை பூமி திட்டத்தின் கீழ் 2015ம் ஆண்டு 1721 வீடுகள் 12 லட்சம் ரூபாவில் கட்டப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டதனைப் பார்த்தால் இன்னும் 165,000 வீடுகள் தேவைப்படுகின்றது. இவ்வகையான நெருக்கடியான வாழ்வியல் நிலைமைகளே இவர்களது கல்வி, சுகாதாரம், பொருளாதாரத்தினை வெகுவாக சிதைக்கின்றன.

**5. சுகாதாரம்**

மலையகத்தில் 2/3 பங்கு மக்களே சுகாதார சேவையை நிவர்த்தி செய்கின்றனர் காரணம் வைத்தியர்கள் ஒரு வருடக்காலம்

பயிற்றப்பட்டவர்களாகவே உள்ளனர். இவர்கள் (M.B.B.S) டாக்டர் தரத்தினை உடையவர்கள் அல்ல. பெருந்தோட்டத்தில் ஒருசில வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றும் அங்கு அபிவிருத்திகள் இல்லைஜ5ஸ. தோட்டங்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பொது சுகாதார பரிசோதகர் (PHI) செல்வதில்லை. தோட்ட சேமநல அதிகாரிகள் மூலமே கர்ப்பிணித்தாய்களுக்கு மகப்பேற்று சேவை வழங்கப்படுகின்றது. 1992ம் ஆண்டு பெருந்தோட்டம் தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமே சுகாதார சேவைகளை இம்மக்களுக்குமேற்கொண்டு வருகின்றது.குறிப்பாக கிராம,நகர்இதேசிய சிசுமரண வீதம் முறையே 7.4%, 14.9%, 19.2%மாக காணப்பட பெருந்தோட்டங்களில் இச் சிசுமரண வீதம் 47.5% உள்ளது (MNBEI 2006). இதற்கு காரணம் முறையான சுகாதார வசதி இன்மையே.

**6. தொழில் இன்மை**

அரச தொழிற்துறையில் பெருந்தோட்ட மக்களது பங்கு மிகக் குறைவு 0.1% அரச துறையில் உள்ளனர். 2மூ மாகாண சேவையிலும், 0.5%அரசாங்கசபை மற்றும் கூட்டுத்தாபனங்களில் தொழில் புரிகின்றனர். 1975ம் ஆண்டு தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட பின் பெருந்தோட்டத்துறை நிர்வாக வேலைகள் பெரும்பான்மை மக்களுக்கு சென்றது. இன்று தொழில் நிமிர்த்தம் கொழும்பிலேயே அதிகமான பெருந்தோட்ட மக்கள் கூலிக்காக வேலை செய்கின்றனர்[7].இதில் பெருமளவானவர்கள் இளைஞர்களாவர்.இலங்கையின் நகர, கிராம வறுமை வீதம் முறையே 2.7%, 7.6% இருக்கும் போது பெருந்தோட்டத்துறையின் வறுமை வீதம் 10.9% காணப்படுகின்றது. (2012/2013 HIES House Hold In Comeand Expendituresurvey) தேசிய ரீதியான வறுமை 6.7% குறைந்துள்ள போதும் பெருந்தோட்ட வறுமை சதவீதத்தில் மாற்றம் இல்லை.

**7. கல்வி**

பெருந்தோட்டத்தில் 843 பாடசாலைகள் உள்ளன. இதில் 54%சதவீதமானவை ஆரம்ப கல்வியை மாத்திரமே போதிக்கின்றன. 31% பாடசாலைகள் இரண்டாம் நிலைக் கல்வியை போதித்து வருகின்றன. இதில் தரம் 11 வரையான வகுப்புக்களை கொண்ட பாடாசலைகள்109 ஆகவும் (13%) உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம், வணிகம், கலை ஆகிய பாடங்களைக் கொண்ட பாடசாலைகள் 2%மே உள்ளன. இவ் இனக்குழுக்களுக்கானபாடசாலை வளமானது ஏனைய சமூக கட்டமைப்போடுஒப்பிடும்போது சிறிய அளவிலான வளத்தினையே் கொண்டுள்ளது. மலையகத்தில் 6க்கும் குறைவான தமிழ் தேசிய பாடசாலைகளே உள்ளன. இவை (கண்டி, பதுளை, மாத்தளை)இல் பெரும்பாலும் நகரங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்ட பகுதியில் அமைக்கப்படவில்லை. 15 தேசிய பல்கலைக்கழகங்களில் ஆண்டுக்கு சராசரியாக 22,000 மாணவர்கள் சகல பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் போது பெருந்தோட்டங்களில் 500க்கும் குறைவான மாணவர்களே பல்கலைக்கழகத்தில் உள்வாரியாக கல்வி பயில்கின்றனர். வருடத்துக்கு 100 – 150 மாணவர்களேபல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படுகின்றனர் [3]. இவற்றில் பெரும்பான்மையோர் கலைத் துறையினரே. 1930ம் ஆண்டுஇலங்கையில் கல்வி தேசியமயமாக்கப்பட்ட போது 1960ம் ஆண்டே பெருந்தோட்டம் தேசிய கல்விநீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது[7]. இது ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் 30வருட காலம் தேசியகல்வி முறைக்குள் பெருந்தோட்டம் உள்வாங்கப்படவில்லை என்பது இச்சமூகத்தின் வளர்ச்சிக்கு தடையாகவுள்ளது.

**VI. முடிவுரை**

ஒரு சமூகத்தினுடைய அசைவு இயக்கத்தினை தீர்மானிப்பதில் அரச நிர்வாக கட்டமைப்பு, பொதுச்சேவைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் என்பன முக்கியமானவை ஆனால் மேற்குறிப்பிட்டப்பட்ட பல பாரபட்சமான செயற்பாடுகள் இலங்கையின் பொருளாதாரத்தினை பலப்படுத்தும் பெருந்தோட்ட சமூகத்தின் வளர்ச்சி நிலைக்கு மிகப்பெரும் தடைக்கல்லாகவே காணப்படுகின்றது.ஆகவே இம்மக்களும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட்டு ஏனைய சமூகத்தினர் அனுபவிக்கின்ற அடிப்படையான சகல உரிமைகளையும் பெறவேண்டுமாயின். முதலில் மலையக மக்கள் அரசநிர்வாக இயந்திரத்திற்க்குள் சட்டரீதியாக உள்வாங்கப்பட வேண்டும். சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படும் சேவைவழங்கல்,கொள்கை திட்டமிடல் செயற்பாடுகளில் பெருந்தோட்ட சமூகம் முதன்மைபடுத்த வேண்டும். மலையக மக்கள் குறித்து மேற்கொள்ளப்படும் பாரபட்சமான நிர்வாக முறைகள் ஒழிக்கப்படுவதுடன்பெருந்தோட்டத்துறை மக்களின் அபிவிருத்திக்கான நீண்டகால,குறுங்கால திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட

வேண்டும். இத்தகையசெயற்திட்டங்கள் வெற்றி பெறவேண்டுமாயின் மலையக மக்கள் இந்நாட்டில் தங்களுடைய நிலைக்குறித்த சரியான தெளிவை உணர்ந்து தமக்கான சேவையை அரசிடமிருந்து பெற்று அடிப்படை தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஓர் சிறந்த தலைமைத்துவத்தினை தோற்றுவிக்க வேண்டும். நடைமுறை அரசியல்நிலை குறித்த தெளிவினை பெற்று அரசாங்கத்திற்கான அழுத்தத்தினை தொடர்ச்சியாக கொடுக்கும் ஓர் மக்கள் சமூகமாக மாறவேண்டும். தற்போது வளர்ச்சியடைந்து வரும் கல்வி தரத்தின் வேகத்தினை அதிகரிக்கச் செய்து எதிர்கால மலையக சமூகத்தினை கல்வியில் முன்னனி வகிக்கும் சமூகமாக தோற்றுவிப்பதற்கு ஒவ்வொரு மலையகத்தவரும் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அரசியல் சமூகம் பொருளாதாரம் தொடர்பான விழிப்புணர்வை பெற்றவர்களாக மலையக மக்கள் தங்களை மாற்றி கொள்ள வேண்டும் அதற்கான செயற்திட்டங்களை இம்மக்கள் மத்தியில் இருந்து உருவாகிய கல்வி மட்டத்தில் தேர்ச்சி பெற்ற ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும். அதேநேரம் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்ற கொள்கையை கொண்டுள்ள இந்நாட்டில் காலம்காலமாக மலையக சமூகம் பாதிக்கப்பட்டு வருகின்றதென்றாள் அது ஓர்வகை சமூக நோய்க்கு சமமாகும். ஆகவே பல இனம் வாழும் நம் தாய்நாட்டில் மலையக மக்கள் தொலைத்த அடிப்படை உரிமையினை பெற்றுக் கொடுத்து இச்சமூக நோயினை தீர்க்கின்ற மருத்துவர்களாக அனைத்து இனமக்களும் மாறுகின்ற போது மலையக மக்களின் தொடர்போராட்டம் நிச்சயம் நிவர்த்தி செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை.

## Reference


1. Guyde fontgallan.M.,"Buddhasinglavarum sirupanmayinrum", besant nager, madras –India.(1987).
2. Lenin mathivanam. J.,"Malaiyakam Teciyam Carvatecam", Kumaran Book House Colombo 10.(2010).
3. Ramesh. R., "Local government authorities Tamil community in Srilanka A – The oretical critique A. me morial oration of late R. Sivalingam. Hiyhants central college Hatton.(2012).
4. Vamadevan. M. "Malayagam samaththuram A biviruthiyai wokki, Bakya pathippagam. (2014).
5. லோரன்ஸ். அ. "மலையகம் சமகால அரசியல் - அரசியல் தீர்வு", மலையக வெளியீட்டகம் தலவாக்கலை.(2006).
6. சரவணன்,என்.,"இலங்கை அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும்", மூன்றாவது மனிதன் பதிப்பகம், கொழும்பு.(2001).
7. சாரல் நாடன்.,"மலையகம் வளர்த்த தமிழ்", துரைவி வெளியீடு, சென்னை.(1997).
8. சாரல் நாடன்.,"தேபக்தன் கோ.நடேசய்யர்", குமரன் புத்தக இல்லம், கொழும்பு – 11. (2008).
9. சத்தியநாதன், ச.,"மலையக அரசியலும், ஜீவ வாழ்வும்", ஞானம் பதிப்பகம், கண்டி. (1999).